...து வருஷம் வைகாசி ஹஸ்தம் (28.5.1996)
...டு பதிப்பு: தாது வருஷம் புரட்டாசி ஹஸ்த ம் (12.10.1996)

குறிப்பு:

இந்த வெளியீடு இலவசம். இதனை அஞ்சலில் பெற விரும்புவோர் ரூ.2/- (அஞ்சல் வில்லையாக) G.E. கோபாலன், 164, தம்புச் செட்டித் தெரு, சென்னை-600 001 என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

## தொகுப்புக்கு ஆதாரமான நூல்கள்

1. ஸ்ம்ருதி முக்தாபலம்
   (ஸ்ரீவைத்யநாத தீக்ஷிதர் - 1900)
2. ஆசௌச சதகம்
   (வைதீக ஸார்வபௌமர் ஸ்ரீ தோழப்பர்-மேல்பாக்கம் ஸ்ரீ நரஸிம்ஹாசார்யர் உரை - 1989)
3. ப்ராசீனாசார ஸங்க்ரஹம் - உத்தரபாகம்
   (நாவல்பாக்கம் ஸ்ரீ அய்யா தேவநாதாசார் - 1972)
4. தர்மசாஸ்த்ரச் சுருக்கம்
   (ஆர். முத்து ஸ்வாமி அயயர் - 1958)
5. பிறப்பு இறப்புத்தீட்டும் உதகதானமும்
   (பரனூர் P.V. வெங்கட்ராம சிரௌதிகள்)

   த்ரிராத்ரா ஞாதிகள்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## நூன்முகம்

முன்பெல்லாம் 'தீட்டு' என்பதை விஷ ஜந்துக்களான பாம்பு, தேள் இவற்றின் விஷத்திற்கொப்பாக பாவித்து, பயந்து அநுஷ்டித்து வந்தனர். ஒரு பஹிஷ்டா ஸ்த்ரீ மூன்று நாட்கள் விலகியிருந்து நான்காம் நாள் தீர்த்தமாடியபின்தான் ஓரளவு சுத்தி என்று கருதினார்கள். இப்பொழுது அவ்வழக்கங்கள் எல்லாம் மாறி, விலகியிருப்பதே துர்லபமாகி வருகிறது. வயதில் பெரியவர்களும் இதை வலியுறுத்த முன்வருவதில்லை. ஒரே பாத்திரத்தில் உணவும் பரிமாறுகின்றனர். கலியின் ஆதிக்கம் வெகு சீக்கிரமாகப் பெருகிவிட்டது. பிறப்பு, இறப்புத்தீட்டு விஷயங்களும் பலருக்கு தெரிவதில்லலை. அவற்றை அநுஷ்டிக்க வேண்டியதன் அவசியத்தையும் உணர்வதில்லை. இத்தகைய தவறுகள் வம்ச நாசத்துக்கே வழி வகுக்கும் என்பதையும் தெரிந்து கொள்வதில்லை இப்படியெல்லாம் நம் சமூகம் சீரழிவதைப் பார்த்து மனம் வெதும்பித்தான் இச்சிறுநூலை வெளியிடுகிறேன். இதைப்படித்து இனியாவது நம்மவர்கள் சற்றுமனந்திருந்த வேண்டும். அதன் காரணமாகத்தான் ஸ்ரீ தேவாதிராஜன் என்னை ஒரு பொருளாக்கி இதை வெளியிடத் தூண்டுகிறார் என்று எண்ணுகிறேன்.

இச்சிறுநூல் கூடுமானவரை எல்லா விஷயங்களையும் கொண்டுள்ளது. பல க்ரந்தகங்களையும் பார்த்து சாராம்சங்களைத் தொகுத்து நூலாக அளித்துள்ள ஆப்தர் ஸ்ரீ சுந்தரம் பாஷாந்தரத்தில் டாக்டர் படடம் பெற்றவர். தம்மிடம் கற்கும் வித்யார்த்திகளும் அந்தப் பட்டம் பெற வழிகாட்டுபவர். வைதிகத்தில் சிரத்தை உள்ளவர். வெகு பிரயாசைப்பட்டு இந்நூலைத் தொகுத்து வழங்கியிருக்கிறார்.

இதன் கையெழுத்துப் பிரதியைப் பூர்ணமாக சோதித்து வேண்டுவனவற்றை ஏற்று வேண்டாதவற்றை நீக்கித் தந்துதவிய ஸ்ரீ உபயவே வலயப்பேட்டை (நாவல்பாக்கம்) ஸ்ரீ ராமாநுஜ தாதாசார்ய ஸ்வாமிக்கு அடியேனது உளங்கனிந்த க்ருதஜ்ஞதையை விஜ்ஞாபித்துக் கொள்கிறேன். இவர் பாரத ஜனாதிபதியின் விருது பெற்றவர். இந்த ஸ்வாமி ஆறாவது பிராயத்தில் தன் பிதா, பிதாமகன் இருவரையும் ஒரு மணி அவகாசத்தில் இழந்து, நாவல்பாக்கம் மஹா வித்வான் உபயவே அய்யா தேவநாத தாதாசார்ய ஸ்வாமியின் அபிமான புத்ரனாக வளர்ந்து ஸகல சாஸ்த்ரங்களையும் கசடறக்கற்று உணர்ந்த மஹாமேதை. ஸம்ப்ரதாயத்தில் மிகவும் ஊற்றம் உள்ளவராகையாலே, அடியேன் இக் கையெழுத்துப் பிரதியை அனுப்பியவுடன், பல காரியங்களுக்கிடையிலும் இதனைச் சோதித்து உடனடியாக அனுப்பி வைத்தார். அவரது கைங்கர்யத்துக்கு அடியேனது க்ருதஜ்ஞதையை மறுபடி விஜ்ஞாபித்துக் கொள்கிறேன்.

சாஸ்த்ரஜ்ஞர்களும், மஹான்களும் இச்சிறுநூலில் மேலும் ஏதாவது சேர்க்க குறைக்க, மாற்றவேண்டுமென்றாலும், எழுதினால் மறுபதிப்பில் அவற்றை நிறைவேற்றுவேன்.

இந்த மறுபதிப்பிற்கு அச்சிட வாங்கிய காகிதத்துக்கும் அட்டைக்கு வாங்கிய காகிதத்துக்கும் செலவான சுமார் ரூ.2000/-க்கு அடையார் காலக்ஷேப கோஷ்டியைச் சேர்ந்த 19 ஆஸ்திகர்கள் ஸ்ரீமான்கள் E.S. நரஸிம்ஹன், பந்தல்குடி ராமபத்ரன் ஆகியோர் மூலம் அனுப்பிய ரூ.1500/- செலவிடப்பட்டது. அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புத்தகத்தை வெகு அழகாகவும் குறுகிய காலத்திலும் இலவசமாக அச்சிட்டுத் தந்த ஸ்ரீ உதயா பிரிண்டர்ஸ் உரிமையாளர் எனது நண்பர் ஸ்ரீ உபயவே N.R. விஜயராகவாச்சாரியாருக்கு எனது க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

க்ருஷ்ணமாசாரி.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## முன்னுரை

பிறப்பு, இறப்பு முதலிய தீட்டு விஷயமான ஒரு தொகுப்ப நூலை வெளியிட வேண்டும் என்பது ஸ்ரீ உ. வே. கருடபுரம் (சாலா. போகம்) கிருஷ்ணமாசார்ய ஸ்வாமியின் நெடுநாள் அவா. இந்நூல் மிகவும் எளிமையான முறையில் அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் அமைய வேண்டுமெனவும் அவர் விரும்பினார். சில நாட்களுக்கு முன்பு இப்பணியை நிறைவேற்றுமாறு அடியேனை நியமித்தார். அடியேனையும் ஒரு பொருட்டாக மதித்து இந்தக் கைங்கர்யத்தில் ஈடுபடுத்தியதற்காக இந்த ஸ்வாமியினிடத்தில் அடியேன் ப்ரணாம பூர்வமாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தொகுப்பு நூலை நன்கு பரிசோதித்துத் திருத்தங்களைச் செய்து உதவிய மத்திய அரசு விருது பெற்ற வித்வான் ஸ்ரீ உபயவே வலயப்பேட்டை ராமாநுஜ தாத்தாசார்ய ஸ்வாமிக்கும் அடியேன் ப்ரணாம பூர்வகம் நன்றியைத் தெரவித்துக் கொள்கிறேன்.

எந்த பிரதி ப்ரயோஜனத்தையும் எதிர்பார்க்காமல் இவ்வளவு முதிர்ந்த வயதிலும் தேக அஸௌகரியத்தையும் பொருட்படுத்தாமல் நம் ஸம்ப்ரதாய கைங்கர்யத்தில் ஈடுபட்டு வரும் ஸ்ரீ உபயவே. கிருஷ்ணமாச்சார்ய ஸ்வாமி பேரருளாளன் கிருபைக்குப் பரிபூர்ணமாகப் பாத்திரமானவர். ஸ்வாமி அனேக ஸம்வத்ஸரங்கள் ஆரோக்யமாக எழுந்தருளியிருந்து இத்தகைய பணிகளைத் தொடர்ந்து செய்யவேண்டுமென்பதே ஸ்ரீதேவாதி ராஜனிடம் அடியேனது பிரார்த்தனை.

தொகுப்பு நூலான இதில் உள்ள குறைபாடுகளைப் பெரியோர் க்ஷமித்து அடியேனைத் திருத்திப் பணிகொள்ள வேண்டுகிறேன்.

**தாஸன் S. சுந்தரம்**

**(குறிப்பு : ஸ்ம்ருதி முக்தா பலம், ப்ராசீனாசார ஸங்க்ரஹம், ஆசௌச சதகம் முதலிய பல க்ரந்தங்களிலிருந்து இச்சிறு நூல் தொகுக்கப்பட்டுள்ளது.)**

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிறப்புத் திட்டு | 3 |
| 2. | குறைப்பிரசவத் திட்டு | 5 |
| 3. | இரட்டைப் பிரசவ விஷயம் | 5 |
| 4. | இறப்புத் திட்டு | 7 |
| 5. | திட்டுச்சேர்க்கை | 13 |
| 6. | காலம் கடந்து கேட்ட திட்டு | 14 |
| 7. | வபனம் | 15 |
| 8. | கர்த்தாவின் க்ரமம் | 17 |
| 9. | சில பொது விஷயங்கள் | 18 |
| 10. | சில சொற்களின் பொருள் | 22 |

மோக்ஷம் அடைய, கீழ்க்காணும் இரு பாசுரங்களையும் ஸதா அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கவும்.

உன்னருளாங் கதியின்றி மற்றொன் றில்லேன்
நெடுங்காலம் பிழைசெய்தேன் நிலை கழிந்தேன்
உன்னருளுக் கினிதான நிலை உகந்தேன்
உன்சரணே சரணென்னும் துணிவு பூண்டேன்
மன்னிருளாய் நின்றநிலை எனக்குத் தீர்த்து
வானவர்தம் வாழ்ச்சிதர வரித்தேன் உன்னை
இன்னருளால் இனியெனக்கோர் பரமேற்றாமல்
என்திருமால் அடைக்கலங்கொள் என்னை நீயே.
(ஸ்ரீ தேசிகப்ரபந்தம் — அமிருதாசுவாதினி–31 )

என்னுயிர்தந் தளித்தவரைச் சரணம புக்கி
யானடைவே யவர்குருக்கள்நிரை வணங்கிப்
பின்னருளாற் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி
நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக் கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனை நாதன்
இன்னமுதத் திருமகளென் றிவரை முன்னிட்(டு)
எம்பெருமான் திருவடிகள் அடைகின் றேனே.
(ஸ்ரீ தேசிகப்ரபந்தம் _ அதிகாரசங்கிரகம் _3 )

---

## பிறப்புத் தீட்டு

| தீட்டுக்காரர் | தீட்டின் விவரம் | தீட்டின் காலம் | குறிப்பு |
|---|---|---|---|
| பெற்ற தாய் | ஆண்குழந்தை பிறந்தால் | 10 நாள் | இது வ்ருத்தி (பிறப்பு தீட்டு) |
| ,, | ,, | பிறந்தது முதல் 30 நாள் | 31 ஆவது நாள் முதல் பாத்திரம்தொடக்கூடிய சுத்தி |
| பெற்ற தந்தை | ,, | 10 நாள் | இது வ்ருத்தி |
| பத்துநாள் பங்காளிகள் (ஸபிண்டர்கள்) | ,, | ,, | ,, |
| பெற்ற தாய் | பெண்குழந்தை பிறந்தால் | ,, | |
| ,, | ,, | 40 நாள் | 41 ஆவது நாள் முதல் பாத்திரம் தொடக்கூடிய சுத்தி |
| பெற்ற தந்தை | ,, | 10 நாள் | இது வ்ருத்தி |
| பிறந்த குழந்தையின் ஸஹோதரன் | ஸஹோதரன் அல்லது ஸஹோதரி பிறந்தபொழுது | ,, | |
| பிறந்த குழந்தையின் மாற்றாந்தாய் வயிற்று ஸஹோதரன் | மாற்றாந்தாய் வயிற்றில் ஸஹோதரன் அல்லது ஸஹோதரி பிறந்தபோது | ,, | ,, |
| பிறந்த குழந்தையின் தகப்பன்வழி பெரியப்பா, சிற்றப்பா | அண்ணன் அல்லது தம்பிக்கு குழந்தை பிறந்தால் | ,, | ,, |

| தீட்டுக்காரர் | தீட்டின் விவரம் | தீட்டின் காலம் | குறிப்பு |
|---|---|---|---|
| பிறந்த குழந்தையின் ஒன்றுவிட்ட சகோதரர் (தகப்பன் வழி) பெரியப்பா, சிற்றப்பா பிள்ளைகள் | பெரியப்பா(அ) சிற்றப்பாவுக்கு குழந்தை பிறந்தால் | 10 நாள் | இது வ்ருத்தி |
| பிறந்த குழந்தையின் தகப்பன்வழிப்பாட்டன் (பிதா மகன்) | தன் பிள்ளைக்கு குழந்தை பிறந்தால் | ,, | ,, |
| பிறந்த குழந்தையின் தகப்பன்வழிப் பாட்டனின் சகோதரர்கள்(பெரிய தாத்தா, சிறிய தாத்தா) | தன் உடன் பிறந்தவனுக்குப் பேரன் பேத்தி பிறந்தால் | ,, | ,, |
| பிறந்தகுழந்தையின் பாட்டனின்(தகப்பன் வழி)மாற்றாந்தாய் வயிற்று சகோதரன் | | ,, | ,, |
| பிரசவித்தவளின் தந்தை அதாவது பிறந்தகுழந்தையின் தாய்வழிப்பாட்டன் * . | பெண் பிரசவித்தால் | 3 நாள் | ,, |
| பிரசவித்தவளின்தாய் (குழந்தையின்தாய் வழிப்பாட்டி) * | ,, | ,, | |
| பிரசவித்தவளின் சகோதரன் * | சகோதரி பிரசவித்தால் | ,, | 3 நாள்(இது ப்ராசீனாசாரம்); 1 நாள்என்றும்சிலர் சொல்வர். |
| பிரசவித்தவளின் பெரியப்பா, சிற்றப்பா, அம்மான் * | சகோதரன் பெண் அல்லது மருமாள் பிரசவித்ததால் | 1 நாள் | இது வ்ருத்தி |

| தீட்டுக்காரர் | தீட்டின் விவரம் | தீட்டின் காலம் | குறிப்பு |
|---|---|---|---|
| பிரசவித்தவளின் தாய்வழிப்பாட்டன் (அதாவது பிறந்த குழந்தையின் தாயாரின் தாய்வழிப்பாட்டன்) * | பெண்ணின் பெண் பிரசவித்ததால் | 1 நாள் | இது வ்ருத்தி |

குறைப் பிரசவம் (**abortion**) ஏற்பட்டால் தீட்டின் விவரம்

| ஒரு ஸ்த்ரீக்கு குறைப்பிரசவம் ஏற்பட்டால் | தீட்டு | | | |
|---|---|---|---|---|
| | தாய் | தகப்பன் | பத்து நாள் பங்காளிகள் | குறிப்பு |
| 3 மாதத்தில் | 3 நாள் | — | — | கலைந்து விழுதல் |
| 4 மாதத்தில் | 4 நாள் | ஸ்நானம் மட்டும் | — | ,, |
| 5 மாதத்தில் | 5 நாள் | ,, | ஸ்நானம் மட்டும் | |
| 6 மாதத்தில் | 6 நாள் | ,, | ,, | |
| 5 அல்லது 6 மாதம் | 5 நாள் 6 நாள் | 3 நாள் 3 நாள் | 3 நாள் 3 நாள் | கலைந்து பிண்டமாக விழுதல் |
| ஆறு மாதத்திற்கு மேலானால் | முழுமையான தீட்டு (10 நாள்) | முழுமையான தீட்டு (10 நாள்) | முழுமையான தீட்டு(10நாள்) குழந்தை ஆணாக இருந்தால் மட்டும் | மூன்று நாள் பங்காளிகளுக்கு 3 நாள்(குழந்தை ஆணாக இருந்தால் மட்டும்) |

## இரட்டைப் பிரசவ விஷயம்

இரண்டும் ஆண் ஆனால் மேலே ஆண் குழந்தைக்குச் சொன்னபடி; இரண்டும் பெண் ஆனால் பெண் குழந்தைக்கு மேலே சொன்னபடி; ஒன்று ஆண் ஒன்று பெண் ஆனால் ஆண்குழந்தைக்கு மேலே சொன்னபடி.

குறிப்பு: 1. மேலே குறிப்பிட்ட தீட்டுள்ள நபர்களில் ஆண்களுக்கு உள்ள தீட்டு, அவர் விவாஹமானவர் என்றால் அவர் மனைவிக்கும் உண்டு,

2. பிறப்புத் தீட்டை, தீட்டின் காலம் கடந்து கேட்டதால் தீட்டு கிடையாது; பிதாவுக்கு ஸ்நானம் மட்டில் உண்டு.

3. **விசேஷவிதி:** உபநயனமில்லாதவனுக்கும் விவாஹமாகாத பெண்களுக்கும், ப்ரஹ்மசாரி (உபநயனம் நடந்து விவாஹம் ஆகாதவன்) ஆகியவர்களுக்கும் தீட்டு கிடையாது.

* மேற்படி வ்ருத்தி தீட்டு, மேற்படி நபர்களுக்கு அவர்கள் வீட்டில் மேற்படி ஸ்த்ரீபிரஸவித்தாலும், அவர்களின் பணச் செலவில் பிரஸவித்தாலும் மட்டுமே ஏற்படும்; மற்றபடி தீட்டு இல்லை என்று சிலர் கூறுவர்.

ஆயினும், பிரசவித்தவளின் தாய், தகப்பன், ஸஹோதரன் இவர்களுக்கு அவர்கள் வீட்டில் பிரஸவித்தாலும் இல்லாமல் போனாலும் அவர்களின் த்ரவ்யம் உபயோகப்பட்டாலும் இல்லாவிட்டாலும் மேலே சொன்னபடி தீட்டு உண்டு என்றும் ப்ராசீனர்களின் அபிப்ராயப்படி அநுஷ்டானத்தில் இருந்து வருகிறது.

## இறப்புத் தீட்டு

| தீட்டுக்காரர் | தீட்டின் விவரம் | தீட்டின் காலம் | குறிப்பு |
|---|---|---|---|
| பிள்ளை | தாய், தகப்பன் இறந்தால் | 10 நாள் | எப்படியும் இந்தத்தீட்டு உண்டு; 11, 12_ஆம் நாள் க்ரியை நடக்கும்பொழுது மட்டில் தீட்டு |
| ஸபிண்டர்களுக்கு (10 நாள் பங்காளிகளுக்கு) | ஸபிண்டர் மரித்தால் (10 நாள் பங்காளிகள் மரித்தால்) | 10 நாள் (9_ஆவது நாள் முடிவுக்குள் எப்பொழுது கேட்டாலும், கேட்டதினம் முதல் மிகுந்த தினங்கள்) | தாயாதர் என்பதால் |
| பிதாவுக்கு | ஆண் குழந்தை (அ) பெண் குழந்தை, பிறந்த 10 நாட்களுக்குள் இறந்தால் | 10 நாள் | இது பிறப்புத் தீட்டோடு போய்விடும். இறப்புத் தீட்டு தனியாக அதிகநாள் கிடையாது |
| ஸஹோதரனுக்கு (விவாஹம் ஆனவன் என்றால்) | தனக்கு ஸஹோதரன் பிறந்து 10 நாட்களுக்குப்பின் இறந்தால், ஸஹோதரி பிறந்து 10 நாட்களுக்குப்பின், விவாஹத்திற்கு முன் எப்பொழுது இறந்தாலும் (இது மாற்றாந்தாய் வயிற்றில் பிறந்தவர்களுக்கும் பொருந்தும்) | 10 நாள் | |
| ஒருவர்க்கு | 10 நாள் பங்காளியின் ஆண் குழந்தை ஆறு வயதுக்குப்பின் இறந்தால் | 10 நாள் | உபநயனம் ஆகாவிட்டாலும் இது பொருந்தும் |
| பெண் வயிற்றுப் பேரனுக்கு | தாயின் தந்தை (அ) தாயின் தாய் இறந்தால் | 3 நாள் | |

| தீட்டுக்காரர் | தீட்டின் விவரம் | தீட்டின் காலம் | குறிப்பு |
|---|---|---|---|
| மருமானுக்கு | தாயின் ஸஹோதரன் (அ) மாமா இறந்தால் | 3 நாள் | |
| மாப்பிள்ளைக்கு | மாமனார், மாமியார் இறந்தால் | 3 நாள் | |
| ஒரு ஸ்த்ரியின் தமக்கை (அ) தங்கை பிள்ளைக்கு | சித்தி (அ) பெரியம்மா இறந்தால் | 3 நாள் | |
| மருமானுக்கு | அத்தை இறந்தால் | 3 நாள் | |
| ஸஹோதரனுக்கு | விவாஹமான ஸஹோதரி இறந்தால் | 3 நாள் | |
| தகப்பனுக்கு | (விவாஹமான) பெண் இறந்தால் | 3 நாள் | |
| மாமாவுக்கு | ஸஹோதரியின் (உபநயனமான) பிள்ளை (மருமான்) இறந்தால் | 3 நாள் | |
| பாட்டனுக்கு | பெண் வயிற்றுப் பேரன் இறந்தால் | 3 நாள் | உபநயனம் ஆனவன் என்றால் |
| ஒருவருக்கு | மூன்று நாளைய பங்காளிகள் இறந்தால் | 3 நாள் | |
| ஸ்வீகாரம் போன ஒருவனுக்கு | ஜனகமாதா (அ) பெற்ற தாய் இறந்தால் | 3 நாள் | |
| ஸ்வீகாரம் போன ஒருவனுக்கு | ஜனக பிதா (அ) பெற்ற தகப்பன் இறந்தால் | 3 நாள் | |
| ஒருவர்க்கு | 10 நாளைய பங்காளியின் பிள்ளை 3 முதல் 6 வயது வரை | 3 நாள் | உபநயனம் ஆனாலும், இல்லாவிட்டாலும் |
| அம்மான் சேய்க்கு | அத்தை பிள்ளை (அத்தான்) இறந்தால் | 1 ½ நாள் | |
| அம்மான் சேய்க்கு | அத்தை பெண் (அத்தங்கார்) இறந்தால் | 1 ½நாள் | |
| அத்தானுக்கு | அம்மான் சேய் (மாமா பிள்ளை) (அ) அம்மங்கார் (மாமா பெண்) இறந்தால் | 1 ½நாள் | |

| தீட்டுக்காரர் | தீட்டின் விவரம் | தீட்டின் காலம் | குறிப்பு |
|---|---|---|---|
| மாமாவுக்கு | 3 வயதுக்கு மேல் உபநயனம் ஆகாத மருமான் இறந்தால் மருமாள் இறந்தால் | 1 1/2 நாள் | |
| ஒருவர்க்கு | தாயின் ஸஹோதரி பிள்ளை, பெண் இறந்தால் | 1 1/2 நாள் | |
| ஒருவர்க்கு | பெரியப்பா, சிற்றப்பா பெண் இறந்தால் | 1 1/2நாள் | (விவாஹமானவள்) |
| பாட்டனுக்கு | பிள்ளையின் பெண் இறந்தால், பெண்ணின் பெண் இறந்தால், பெண்ணின் பிள்ளை (3 வயதுக்கு மேற்பட்டு ஆனால் உபநயனமாகாமல் இறந்தால்) | 1 1/2நாள் | |
| ஒருவர்க்கு | தன் மாற்றாந்தாய் வழியில், மாமா, சித்தி, பெரியம்மா, ஸஹோதரி பிள்ளை, ஸஹோதரி பெண், பெண்ணின் பிள்ளை, பெண்ணின் பெண் இறந்தால் | 1 நாள் | |
| ஒருவர்க்கு | மைத்துனன் இறந்தால் | 1 நாள் | |
| ஒருவர்க்கு | தந்தையின் மாற்றாந்தாய்க்குப் பிறந்த ஸஹோதரன் பெண், ஸஹோதரி, மேற்படியாரின் பெண், பிள்ளை இறந்தால் | 1 நாள் | |
| ஒருவர்க்கு | மாற்றாந்தாயின் தாய் தகப்பனார் இறந்தால், மாற்றாந்தாயுடன் பிறந்தவன் பெண் இறந்தால் | 1 நாள் | (சிலர்) |

| தீட்டுக்காரர் | தீட்டின் விவரம் | தீட்டின் காலம் | குறிப்பு |
|---|---|---|---|
| ஒருவருக்கு | மூன்று தலைமுறைக்குட்பட்ட 2 முதல் 6வயதுள்ள பங்காளி பெண் இறந்தால் | 1 நாள் | |
| ஒருவருக்கு | பத்னி இறந்த பின் குழந்தைகளும் இல்லாமல், மாமனார், மாமியார் இறந்தால் | 1 நாள் | |
| ஒருவர்க்கு | பத்துநாள் பங்காளியின் (6 மாத முதல் 2 வயது வரை)பிள்ளை இறந்தால் | 1 நாள் | |
| ஒருவர்க்கு | பத்துநாள் பங்காளியின் பெண் 6 வயதுக்குள் மரித்தால் | 1 நாள் | |
| மாமனாருக்கு | மாப்பிள்ளை இறந்தால் | ஸ்நானம் மட்டும் | |
| மைத்துனனுக்கு | அத்திம்பேர் அதாவது அக்காள் (அ) தங்கையின் புருஷன் இறந்தால் | ஸ்நானம் மட்டும் | |
| மருமானுக்கு | அத்தை புருஷன் இறந்தால் | ஸ்நானம் மட்டில் | |
| ஒருவருக்கு | மைத்துனி இறந்தால் | ஸ்நானம் மட்டில் | |
| ஒருவருக்கு | ஷட்டகர் இறந்தால், அத்தான் மனைவி(அத்தான் மதனி), அம்மான்சேய் மனைவி, சிறிய தாயாரின் பிள்ளையின் மனைவி ஆகியவர் இறந்தால் | ஸ்நானம் மட்டில் | |

றிப்பு: பக்ஷிணி (1 1/2 நாள் தீட்டு) என்பதன் விளக்கம்:

பக்ஷிணி (1 1/2 நாள்) என்பது 90 நாழிகை (அதாவது 36 மணி) காலம். இது )ரண்டு இரவும் ஒரு பகலும் சேர்ந்த காலம் (அ) இரண்டு பகலும் ஒரு இரவும் சேர்ந்த காலம்.

பகலில் போஜனம் செய்யாமல் இருந்தால் மட்டுமே தீட்டு கழியும். (செய்தால் மறுநாள் உதயம் வரை தீட்டு உண்டு).

2. முதல்நாள் பகலில் மரணம் ஏற்பட்டு மறுநாள் பகலில் ஒருவன் சாப்பிட்ட பிறகு இந்த விஷயம் தெரிய வந்தால், மிகுந்த காலத்தில் சாப்பிடாமல் இருந்து அஸ்தமனம் ஆன பிறகு ஸ்நானம் செய்தால் தீட்டு போய்விடும்.

ஸ்த்ரீகளுக்கு மட்டில்

(இறப்பு தீட்டு)

| தீட்டுக்காரர் | தீட்டின் விவரம் | தீட்டின் காலம் | குறிப்பு |
|---|---|---|---|
| ஒரு பெண்ணுக்கு | ஸஹோதரன் (உபநயனமானவன்) இறந்தால் | 3 நாள் | |
| ,, | உபநயனமான மருமான் (ஸஹோதரன் பிள்ளை) இறந்தால் | 3 நாள் | |
| ,, | ஸஹோதரி பிள்ளை இறந்தால் | 3 நாள் | |
| ,, | மாற்றாந்தாய் இறந்தால் | 3 நாள் | |
| ,, | தனது ஸஹோதரி இறந்தால் | 1 1/2 நாள் | |
| ,, | தகப்பனாரின் ஸஹோதரன் இறந்தால் | 1 1/2 நாள் | |
| ,, | தாயின் ஸஹோதரி இறந்தால் | 1 1/2 நாள் | |
| ,, | மாமா, அத்தை இறந்தால் | 1 1/2நாள் | |
| ,, | சிற்றப்பா, பெரியப்பா, இவர்களது பிள்ளை, மாமா பிள்ளை அத்தை பிள்ளை இறந்தால் | 1 1/2 நாள் | |
| ,, | பெரியப்பா, சிற்றப்பா இவர்களது பெண்கள், மாமா, அத்தை இவர்களது பெண்கள், இறந்தால் | 1 1/2 நாள் | |
| ஒரு பெண்ணுக்கு | தகப்பன் வழிப்பாட்டன், பாட்டி, தாய்வழிப்பாட்டன், பாட்டி, தமையன், தம்பி, இவர்களது பெண் (மருமாள்) இறந்தால் | 1 1/2 நாள் | |

| தீட்டுக்காரர் | தீட்டின் விவரம் | தீட்டின் காலம் | குறிப்பு |
|---|---|---|---|
| ஒரு பெண்ணுக்கு | மாற்றாந்தாய் வழி உறவினர் இறந்தால் (அதாவது மாற்றாந்தாயின் சகோதரன், சகோதரி, மாற்றாந்தாயின் பிள்ளை, பெண், மாற்றாந்தாயின் பேரன், பேத்தி, தன் தகப்பனின் மாற்றாந்தாயின் பிள்ளை, பெண், அவர்களின் பெண், பிள்ளை, தன் மாற்றாந்தாயின் தாய், தகப்பன் இவர்கள் இறந்தால்) | 1 நாள் | |
| ,, | மாமி, அத்தை புருஷன், ஸஹோதரி புருஷன் இறந்தால் | ஸ்நானம் மட்டும் | |

**குறிப்பு :**

பொதுவாக 1 ½ நாள் தீட்டு யாருக்கு யார் (புருஷன் அல்லது ஸ்த்ரீ) மரணத்தால் ஏற்பட்டதோ அது அவர்களுடன் முடிந்து போகும். அந்த புருஷன் (அ) ஸ்த்ரீயின் மனைவி (அ) கணவன் இறந்தால் ஸ்நானம் மட்டுமே.

உதாரணமாக அம்மான் சேய்க்கு அத்தை பெண் இறந்தால் 1 ½ நாள் மட்டும். ஆனால் அத்தை பெண்ணின் கணவன் இறந்தால் ஸ்நானம் மட்டுமே. இது புருஷர்கள் விஷயம்.

ஸ்த்ரீகளுக்கு பர்த்தாவுக்கு எந்தெந்த் தீட்டுக்கள் உண்டோ அவை அப்படியே அவர்களுக்கும் உண்டு.

## தீட்டுச்சேர்க்கை

ஒரு தீட்டை அநுஷ்டிக்கும் பொழுது இன்னொரு தீட்டு நேர்ந்தால் எப்படி அநுஷ்டிப்பது என்பது விளக்கப்படுகிறது.

### பிறப்புத் தீட்டில் பிறப்புத் தீட்டு

1) 10_நாள் பிறப்புத் தீட்டின் இடையில் இன்னொரு 10_நாள் பிறப்புத்தீட்டு வந்தால் அது முதல் தீட்டு முடியும் போதே போய்விடும்.

(ஆனால், 10_நாள் பிறப்புத்தீட்டு காக்கும் பொழுது 10_ஆவது நாள் இரவில் வேறொரு 10_நாள் தீட்டு நேர்ந்தால் அதிகப்படியாக 2_நாள் தீட்டு உண்டு.

10_நாள் பிறப்புத்தீட்டு காக்கும்போது 10 ஆவது நாள் இரவு ஸமானமான பிறப்புத்தீட்டு கேட்க நேர்ந்தால் 10 ஆவது நாளின் **முதன் மூன்று யாமத்திற்குள் கேட்டால்** அதிகப்படியாக இரண்டு நாள் தீட்டு உண்டு. 10 ஆவது நாளின் இரவு நான்காவது யாமம் அல்லது அருணோதயத்தில் கேட்டால் அதிகப்படியாக 3 நாட்கள் தீட்டு இருக்க வேண்டும்.

2) ஒரு பிறப்புத் தீட்டு காத்துக்கொண்டிருக்கும் பொழுது தனக்குக் குழந்தை பிறந்தால் தகப்பனுக்குக் குழந்தை பிறந்தது முதல் 10_நாள் தீட்டு உண்டு.

(ஆனால், தனக்குக் குழந்தை பிறந்து தீட்டுக்காத்துக் கொண்டிருக்கும் பொழுது வேறொரு பிறப்புத்தீட்டு 10 ஆவது நாள் இரவில் நேர்ந்தாலும் அது முதல் தீட்டோடு போய்விடும்).

### பிறப்புத் தீட்டில், இறப்புத் தீட்டு

1) பிறப்புத் தீட்டை விட இறப்புத் தீட்டு பலமானது. பிறப்புத் தீட்டோடு இறப்புத் தீட்டு போகாது. ஆனால், இறப்புத் தீட்டோடு பிறப்புத் தீட்டு போய்விடும்.

(உ_ம்) 10 நாள் இறப்புத் தீட்டின் இடையில் 10_நாள் பிறப்புத் தீட்டு நேர்ந்தால் இரண்டுமே இறப்புத் தீட்டு முடியும் பொழுது போய்விடும். ஆனால், குழந்தையின் தகப்பனுக்கு மட்டில் பிறந்தது முதல் 10_நாள் தீட்டு உண்டு.

2) **தனக்குக்** குழந்தை பிறந்து 10_நாள் தீட்டுக்காக்கும் பொழுது பங்காளிகள் இறந்ததனால் தீட்டு வந்தால், அது பிறப்புத் தீட்டோடு போய்விடும். தன் குழந்தையின் பிறப்புத் தீட்டின்பொழுது அக்குழந்தையே இறந்தாலும் பிறப்புத்தீட்டோடு எல்லாத்தீட்டும் போய்விடும், ஆயினும், தன் குழந்தை 10_ஆவது நாளில் இறந்தால் கூடுதலாக இரண்டு நாளும், 10_ஆவது நாள் இரவின் முடிவில் இறந்தால் கூடுதலாக மூன்றுநாளும் தீட்டு உண்டு.

3) ஒரு நபர் தன் தாய் (அ) தந்தை இறந்து தீட்டுக் காக்கும்பொழுது தனக்குக் குழந்தை பிறந்தால் அந்த பிறப்புத் தீட்டு குழந்தையின் தகப்பனுக்கு தன் தாய் (அ) தந்தையின் இறப்புத்தீட்டோடு போய்விடும். குழந்தையின் தாய்க்கு மட்டும் குழந்தை பிறந்தது முதல் 10 நாள் தீட்டு உண்டு. தாய் (அ) தகப்பன் கர்மாவை 11 வரை நடத்தி நிறுத்தி, மனைவிக்குப் பிறப்புத் தீட்டு கழிந்த பின் நாள் பார்த்து 12ஐ நடத்த வேண்டியது.

4) பங்காளி இறப்புத் தீட்டின் இடையில் சிசு பிறந்தால் தாய் தகப்பனுக்கு மட்டில், பிறந்தது முதல் 10_நாள் தீட்டு உண்டு.

5). பிறப்புத் தீட்டுள்ள பங்காளிகளுக்கு 10 நாளுக்குள் அந்த சிசு மரித்தால் இறப்புக்காகக் கூடுதலான தீட்டில்லை.

## இறப்புத் தீட்டில் இறப்புத் தீட்டு

நாள் தீட்டில் வேறோரு 10 நாள் தீட்டு வந்தால் முந்தைய தீட்டோடு பிந்தைய டும் போய்விடும்

3_நாள் தீட்டில் 10_நாள்தீட்டு வந்தாலும், 10_நாள் தீட்டில் 3_நாள் தீட்டு வந்தாலும், 10 நாள் தீட்டின் முடிவில்தான் தீட்டு கழியும்.

3. பங்காளிகளின் மரணத் தீட்டின் இடையே மாதா பிதாக்கள் இறந்தால் பிள்ளைக்கு 10_நாள் தீட்டு உண்டு. இதேபோல் பத்னி இறந்தால் பர்த்தாவுக்கும், பர்த்தா இறந்தால் பத்னிக்கும், பிளளை (அ) பெண் இறந்தால் தாய் தகப்பனுக்கும், (மரணம் முதல்) 10_நாள் பூர்ணமாகத் தீட்டு உண்டு.

4. 10_நாள் இறப்புத் தீட்டில் 10_ஆவது நாள் இரவில் வேறொரு பத்துநாள் தீட்டு நேர்ந்தால் முதலில் வந்த தீட்டு கழிந்த பிறகு கூடுதலாக இரண்டு நாள் தீட்டு மட்டில் உண்டு.

5. 10_நாள் இறப்புத் தீட்டில் 10_ஆவது நாள் இரவு கடைசி ஜாமத்தில் அல்லது அருணோதயத்தில் வேறொரு 10_நாள் தீட்டு ஸம்பவித்தால் முதல் தீட்டுக்குப்பின் கூடுதலாக 3_நாள் தீட்டு உண்டு.

6. குறைவான நாட்கள் இறப்புத் தீட்டில் அதிகமான நாட்கள் காக்கவேண்டிய இறப்புத் தீட்டு போகாது.

7. தாயார் மரணத்தின் 10_நாள் தீட்டின் இடையே தகப்பனார் மரித்தால் பின் வந்த தீட்டை 10_நாள் அநுஷ்டிக்க வேண்டும். பிதா மரணத்தின் 10_நாள்தீட்டின் இடையே தாயார் மரித்தால் முந்தைய தீட்டிற்குப்பிறகும் 1 1/2 நாள் தீட்டுண்டு.

## காலங்கடந்து கேட்ட தீட்டு

1. இது அதிக்ராந்தாசௌசம் எனப்படும்.

2. 10_நாள் இறப்புதீட்டை இறந்த 10_நாட்களுக்குப் பிறகு 3 மாதங்களுக்குள் கேட்டால் 3_நாள் தீட்டு.

3. 10_நாள் இறப்புதீட்டை 10_நாட்களுக்கு மேல் 4 முதல் 6_மாதங்களுக்குள் கேட்டால் 1 1/2 நாள் (பக்ஷிணியாசௌசம்) உண்டு. இதையே ஆறு மாதத்திற்குப்பின் 1 வருஷத்திற்குள் கேள்விப்பட்டால் 1_நாள். அதன் பிறகென்றால் ஸ்நானம் மாத்ரம்.

4. 3_நாள் தீட்டை 3 _ நாட்களுக்குமேல் 10 நாட்களுக்கு மேல் கேட்டால் 1_நாள். பிறகு கேட்டால் ஸ்நானம் மட்டும்.

5. 1 1/2 நாள் (அதாவது பக்ஷிணி) தீட்டை 1 1/2 நாளுக்கு மேல் 10நாளுக்குள் கேட்டால் ஒரு காலம் தீட்டு உண்டு, அதாவது பகலில் கேட்டால் அஸ்தமனம் வரை, இரவில் கேட்டால் உதயம் வரை, பிறகு கேட்டால் ஸ்நானம் மாத்ரம்.

6. ஒரு நாள் தீட்டுக்கு அதிக்ராந்தாசௌசம் கிடையாது, ஆனால் காலம் கடந்து கேட்டாலும் ஸ்நானம் மாத்ரம் உண்டு.

7. தாய் தகப்பன் மரணத்தில் மூத்த பிள்ளைக்கும், பர்த்தாவின் மரணத்தில் பத்னிக்கும் எப்பொழுது கேட்டாலும் அதுமுதல் 10_நாள் தீட்டு உண்டு.

8. தாய் தகப்பன் மரணத்தில் மூத்த பிள்ளையால் கர்மா நடந்த பிறகு இரண்டாவது முதலான பிள்ளைகள் ஒரு வருஷத்திற்குள் கேட்டால் 10_நாள் தீட்டு. ஒரு வருஷத்திற்கு மேல் கேட்டால் 3 நாள் தீட்டு.

9. பத்து நாள் தீட்டை பத்தாவது நாள் இரவிலும் மூன்று நாள் தீட்டை மூன்றாம் நாள் இரவு அல்லது நான்கு முதல் 10_ஆம் நாள் வரையில் இரவில் கேட்டால் மறுநாள் தர்ப்பணம் செய்யவேண்டியவர்களுக்கு (தகப்பன் இல்லாதவர்க்கு) தர்ப்பணம் செய்வதனால் தர்ப்பண தினத்தில் தீட்டு உண்டு. அதிக்ராந்தமானாலும் தர்ப்பண தினத்தில் அசுத்தி உண்டு.

10. தகப்பன் ஜீவித்து இல்லாதவரே தர்ப்பணம் செய்ய வேண்டும். மற்றவர்களுக்கில்லை. இரவில் தர்ப்பணம் செய்யக்கூடாது.

### வபனம் (க்ஷௌரம்)

1. தஹனம் செய்தவன் அதற்கு அங்கமான வபனம் செய்து கொள்ளவேண்டும். தஹனாங்க வபனம் பிள்ளைகள் எல்லோரும் செய்து கொள்ள வேண்டும். இரவில் செய்து கொள்ள வேண்டி இருந்தால் ஜ்யேஷ்டன் மட்டும் அப்பொழுது செய்து கொண்டு மற்றவர்கள் மறுநாள் செய்து கொள்வது என்பது சில பெரியோர்களின் அபிப்ராயம். 3 நாள் தீட்டுக்காரர்களான ஸமானோதகர்களுக்கு வபனம் கிடையாது.

2. தன் தகப்பனார் உயிரோடு இருப்பவர்களுக்கு வேறு யார் இறந்தாலும் வபனம் இல்லை.

3. 10_நாள் தீட்டுக்காரர் 10_ஆவது நாளிலும், **பங்காளியல்லாத** 3_நாள் தீட்டுக்காரர் 3_ஆவது நாளிலும் வபனம் செய்து கொள்ள வேண்டும். ஆனால் இது எவர் விஷயத்தில் என்பது கீழே விவரிக்கப்படுகிறது:

a)பத்துநாள் பங்காளிகள் விஷயத்தில், இறந்தவர் தன்னைவிட வயதில் பெரியவரானால் வபனம் உண்டு.

மாமா, மாமி, அத்தை, சித்தி இவர்கள் விஷயத்திலும் இறந்த அவர்கள் தன்னைவிட வயதில் மூத்தவரானால் வபனம் உண்டு.

b) தாயின் தந்தை, தாயின் தாய், பெரியம்மா, ஸீமந்த புத்ரியான ஸஹோதரி ஆகியவர் விஷயத்திலும் வபனம் உண்டு. ஸ்வீகாரம் போனவர்க்கு தன்னைப்பெற்ற தாய், தந்தை விஷயத்தில் வபனம் உண்டு.

4. ஒருவர் கீழ்க் கண்டவர்களுக்கு **க்ருத்யம் செய்தால்** இறந்த அந்த நபர் இவருக்கு **வயதில் சிறியவரானாலும்** இவருக்கு வபனமுண்டு: தகப்பன் வழி சிற்றப்பா, மாமா, மாமி, மாமனார், மாமியார், அத்தை, சித்தி, மாற்றாந்தாய், தகப்பன்வழி சித்தி, மதனி ஆகியோர்.

(மேற்படி நபர்கள் விவாஹம் ஆகாத பெண்கள் உபநயனம் ஆகாத ஆண்களாக இறந்தால் கிருத்யம் செய்தாலும் வபனமில்லை. தஹனாங்க வபனமும் இல்லை).

5. மூன்றுநாள் பங்காளிகள் விஷயத்தில் வபனம் இல்லை. **கிருத்யம் செய்தால்** இறந்தவர் வயதில் **மூத்தவர்களாக** இருந்தால் வபனம் உண்டு.

6. தீட்டைக் காலம் கடந்து கேட்டால் வபனம் இல்லை என ப்ராசீனாசார ஸங்க்ரஹம் கூறுகிறது.

7. தீக்ஷையில் வபனம் இல்லை; ஆனால் தாய் தந்தை இறந்தால் தீக்ஷையிலும் வபனம் உண்டு. (**குறிப்பு:** தீக்ஷை என்பது கர்ப்பதீக்ஷை, விவாஹ தீக்ஷை , உபநயன தீக்ஷை, மாத்ரு பித்ரு தீக்ஷை எனப் பல வகைப்படும்.)

**கர்ப்ப தீக்ஷை:** பத்னியின் முதல் கர்ப்பத்தின்போது 4_ஆவது மாதம் முதல்; இரண்டாவது கர்ப்பத்துக்கு 5_ஆம் மாதம் முதல், மற்ற கர்ப்பத்துக்கு 7_ஆவது மாதம் முதல் புருஷன் க்ஷௌரம் செய்து கொள்வதில்லை.

ை. **உபநயன தீக்ஷை:** இவை நடந்தபின் முறையே 1 வருஷம் (அ) 6 மாதம்.

5. **பித்ரு தீக்ஷை:** மாதா, பிதாக்களின் மரணத்திற்குப்பின் 1 வருஷம். இந்த ...யின் நடுவே பத்னி ப்ரஸவித்தால் வபனம் உண்டு.

வெள்ளிக்கிழமையில் வபனம் செய்துகொள்ளக் கூடாது. அதற்கு முதல் (அ) ...நாள் செய்து கொள்ளலாம். ஆனால் தாய் தகப்பனார் விஷயத்தில் ...ள்ளிக்கிழமையானாலும் வபனம் உண்டு.

b)வெள்ளிக்கிழமையில் இறப்பு காரணமான வபனம் செய்து கொள்ளக்கூடாது. அதற்கு முதல் நாளே செய்து கொள்ள வேண்டும். வெள்ளிக்கிழமையன்றே க்ஷவரம் ...ண்ணிக்கொள்ள வேண்டிய தீட்டு தெரிய வந்தால் மறுநாள் நிஷேதமில்லாத நாளாக இருந்தால் (ஏகாதசி, அமாவாஸ்யை போன்ற வ்ரத தினங்களாக இல்லாமலிருந்தால்) மறுநாள் செய்து கொள்ள வேண்டும். க்ஷௌர நிஷேதமான நாட்களாக இருந்தால் க்ஷௌரம் கிடையாது.

9. a)அனேக தீட்டுக்கள் சேர்ந்தாலும் வபனம் ஒன்றே.

b) வபனம் செய்து கொள்ள வேண்டிய தீட்டை வபனம் செய்து கொள்ள வேண்டிய தினத்தில், சாப்பிட்ட பிறகு கேள்விப்பட்டால் வபனம் பண்ணிக் கொள்கிற வழக்கம் இல்லை.

10. ஸபிண்டீகரணத்துக்குப் பிறகு தீக்ஷை அவச்யமில்லை; அநுஷ்டித்தால் நல்லது; இல்லாவிட்டாலும் தோஷமில்லை.

11. a)மாமனார், மாமியார் இறந்தால் ஒருநாள் தீட்டுக்காத்த பிறகு மாப்பிள்ளைக்கு வபனம் கிடையாது.

b) ஸந்ததியும் இல்லாமல், மனைவியும் இறந்த பிறகு மாமனார் மாமியார் இறந்தால் ஒரு நாள் தான் தீட்டு . அப்படி ஒரு நாள் தீட்டு காத்த பிறகு மாப்பிள்ளைக்கு வபனம் கிடையாது.

12. இறந்தவர் தனக்கு வயதில் மூத்தவரா இல்லையா என்ற ஸந்தேஹம் ஏற்பட்டால் வபனம் செய்து கொள்வது நல்லது.

## கர்த்தாவின் க்ரமம்

இறந்த நபருக்குக் கர்மா செய்கின்ற அதிகாரம் அதன் வரிசையில் தரப்படுகிறது. மேலே சொன்னவர் இல்லையென்றால் அதன் கீழே தரப்பட்டவர்களைக் கொண்டு நடத்த வேண்டியது.

1. தன் வயிற்றில் பிறந்த பிள்ளை (ஔரஸன்); (பிள்ளைகள் பலர் இருந்தால் மூத்தவன்)

இறந்தவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருந்து எல்லோருக்கும் பிள்ளைகள் இருந்தால் வயதில் பெரியவனே மூத்தவன்.

ஒருவர் தனக்குப் பிள்ளையில்லை என்று ஸ்வீகாரம் செய்து கொண்ட பின், தனக்கே பிள்ளை பிறந்தால், தனக்குப் பிறந்த பிள்ளையே கர்மாதிகாரி.

2. ஸபத்நீ புத்ரன் (சக்களத்தியின் பிள்ளை).

3. புத்ரிகா புத்ரன் (பெண் ஸந்ததி மட்டுமே உள்ள ஒருவன், பெண்ணை விவாஹம் செய்து கொடுக்கும்பொழுது இவளுக்குப் பிறக்கும் பிள்ளையையே என் புத்ரனாக பாவிப்பேன்' என்று ஸங்கல்பம் செய்து பிறக்கும் பெண்வயிற்றுப் பேரன்).

4. ஸ்வீகாரபுத்ரன். 5. பௌத்ரன், 6. ப்ரபௌத்ரன்(பேரனின் பிள்ளை).

7. ஸொத்தை அடைந்த பெண்வயிற்றுப் பேரன் (தனஹாரி தௌஹித்ரன்).

8. தௌஹித்ரன்.

இவர்கள் ஸ்த்ரி புருஷர் இருவருக்கும் கர்த்தா.

9. பத்னி (பலரானால் மூத்தவள்) – பர்த்தாவுக்குக் கர்த்தா.

10. பர்த்தா (புருஷன்) – பத்னிக்குக் கர்த்தா.

11. பெண் (ஸ்த்ரீ புருஷாள் இருவருக்கும்).

12. ஸஹோதரன்.

13. ஸஹோதரன் பிள்ளை.

14. பின்னோதர ப்ராதா, 15.பின்னோதர ப்ராதாவின் பிள்ளை. 16. பர்த்தாவின் ப்ராதா 17. பர்த்தாவின் ப்ராதாவின் பிள்ளை 18. பிதா 19. மாதா 20. நாட்டுப்பெண் 21. பௌத்ரி 22. தௌஹித்ரி 23. பௌத்ரனின் பத்னி 24. பகினி (ஸஹோதரி) 25. மருமான் 26. ஸபிண்டன் 27. ஸமானோதகன் 28. மாத்ரு ஸபிண்டன் 29. மாத்ரு ஸமானோதகன் 30. ஸகோத்ரன் 31. சிஷ்யன் 32. ரித்விக் 33. ப்ருத்யன் 34. குரு 35. ஆசார்யன் 36. ஸஹாத்யாயி (உடன் பயின்றவன்) 37. மாப்பிள்ளை 38. நண்பன்.

**குறிப்பு :**

ஆசார்யனுக்கு கர்மா விஷயத்தில் கர்த்ருக்ரமத்தில் சிஷ்யன் தௌஹித்ரனுக்கு அடுத்ததாகக் கருதப்படுகிறான். அநேகம் சிஷ்யர்கள் இருந்தால் தனத்தை அடைந்த சிஷ்யன் ஆசார்யனுக்குக் கர்மா செய்யலாம். இதை ஆபஸ்தம்ப ஸூத்ரம் யாக்ஞவல்கிய ஸ்ம்ருதி முதலியவற்றை மேற்கோள்களாகக் காட்டி வைதிக ஸார்வபௌமர் பித்ருமேத ஸார ப்ரச்னத்தில் விரிவாக விளக்கியுள்ளார்.

## சில பொது விஷயங்கள்

ஆசௌச காலத்திலும் கிரஹண தர்ப்பணம் உண்டு.

ஆசௌச காலத்தில் அமாவாஸ்யை மாஸப்பிறப்பு தர்ப்பணங்கள், சிராத்தம் யவை செய்யக் கூடாது.

ஆசௌச காலத்தில் ஆராதனம், கோவிலுக்குப் போவது கூடாது.

ஆசௌச காலத்தில் ஸந்த்யாவந்தனம் உண்டு; ஆனால் மந்த்ரமில்லாமல் ராணாயாமம் பண்ணி, மற்றவற்றை மனதில் மந்த்ரங்களை உச்சரித்துச் செய்யவேண்டும். ருஷி, சந்தஸ் முதலியவை கிடையாது.

5. பர்த்தாவுக்கு உண்டான தீட்டுக்கள் எல்லாம் பத்னிக்கும் உண்டு.

6. பத்னிக்கு மட்டும் சில தீட்டுக்கள் உண்டு; இவை பர்த்தாவுக்கு இல்லை.

7. தீட்டுள்ளவன் இல்லாதவனைத் தொட்டால் குறைந்த பட்சம் ஸ்நானம் செய்ய வேண்டும்.

8. ப்ரஹ்மசாரி, தீட்டுள்ளவனின் அன்னத்தைச்சாப்பிட்டால் பத்து நாட்கள் அசுத்தி உண்டு.

9. ரஜஸ்வலைகளுக்கு மூன்று நாள் தீட்டு; பன்னிரண்டு நாட்களுக்கு முன் ரஜோதர்சனம் நேர்ந்தால் சௌசமாத்ரம். அதன்மேல் 17 நாள் வரை ஸ்நானத்தால் சுத்தி. பதினெட்டு நாட்களுக்கு மேல் ஆனால் 3 நாள்.

10. ராத்ரியில் ஜனன, மரண ரஜோதர்சனங்கள் இரவு 1 ½ மணிக்கு முன் ஆனால் முதல்நாள் கணக்கு. பிறகு ஆனால் மறுதினமாகக் கொள்க. (சூரிய அஸ்தமனத்துக்குப்பிறகு 7 ½ மணிகாலம் வரை முதல் நாள் என்றும் பிறகானால் மறுநாள் என்றும் கணக்கிட வேண்டும். சூரிய அஸ்தமனகாலம் அவ்வப்பொழுது வேறுபடும்; அதனால் கணக்கு சிறிது வேறுபடும்.)

இதையே சற்று வேறு விதமாகவும் குறிப்பிடலாம். அதாவது, உதயத்திற்கு 11 1/4 கால் நாழிகைக்கு முன் ஏற்பட்டால் முதல் நாள் முதல் கணக்கு; பிறகானால் மறுநாள் முதல் கணக்கு. அதாவது சூரியோதயத்திற்கு 4 ½ மணி அவகாசத்துக்கு முன்பானால் முதல்நாள் என்றும் அதற்குப் பிறகானால் மறுநாள் கணக்கு என்றும் கொள்ளவும். (சூரிய உதயம் அவ்வப்பொழுது வேறுபடும். அதைக் கவனிக்கவும்).

11. பிறந்த குழந்தை 10_நாளைக்குள் மரித்தால் கனனம் (புதைப்பது) ஸம்ஸ்காரம். 10 நாள் முதல் 2 வயது வரை கனனம் (அ) தஹனம். அதற்கு மேல் தஹனம்.

12. பிறப்புத் தீட்டை 10_நாள் கழித்துக் கேட்டால் தீட்டு கிடையாது.

13. ஒரு நாள் தீட்டை ஒரு நாள் கடந்தபின் எப்பொழுது கேட்டாலும் ஸ்நானம் மட்டில்

14. இரவில் தர்ப்பணம் செய்யக்கூடாது.

15. பக்ஷிணி என்பது இருபகலும் ஒரு இரவும் கூடிய காலம் (அ) இரு இரவும் ஒரு பகலும் கூடிய காலம், அதாவது 90 நாழிகை அல்லது 36 மணி காலம் (1 ½ நாள்).

16. வேண்டுமென்றே செய்துகொண்ட தற்கொலையானால் அமந்த்ரகமாக தஹனம். தஹனம் வரைதான் தீட்டு. ஒரு வருஷம் கழித்து ப்ராயச்சித்தம் செய்து கர்மாவை அநுஷ்டிக்க வேண்டும். அப்பொழுதுதான் ஜ்ஞாதிகளுக்கு 3—நாள் தீட்டு, தன்னையறியாமல் நேர்ந்த துர்மரணத்தில் அப்பொழுதே ப்ராயச்சித்தம் செய்து கர்மாவும், தீட்டும் அநுஷ்டிக்க வேண்டும்.

17. ஸந்யாசி சவத்திற்கு தோஷமில்லை.

18. ஸந்யாசி மரணத்தில் தீட்டில்லை.

19. மாதா பிதாக்களுக்குத் தவிர மற்றவர்களுக்கு வெள்ளிக்கிழமையில் ஸஞ்சயனம் செய்யக்கூடாது. ஆனால் மாதப் பிறப்பு அமாவாஸ்யை குறுக்கிட்டால் செய்யலாம்.

20. கர்மா மத்தியில் வஸ்த்ரம், பிண்டம், பாத்ரம், செம்பு, பாஷாணம் (கல்) காணாமல் போனால் புதியதாக ஸ்தாபித்து கடந்த பிண்டோதகங்களை மறுபடி செய்ய வேண்டியது.

21. மாதா பிதாக்கள் விஷயத்தில் 12 முதல் 17 நாள் வரை ஸபிண்டீகரணம் செய்ய நாள் பார்க்க வேண்டியதில்லை.

22. பன்னிரண்டு வயது முடியாத ப்ரஹ்மசாரிக்கு ஸபிண்டீகரணம் செய்வதில்லை; நாராயணபலி உண்டு.(உபநயனமாகாதவன் 12 வயதுக்குமேல் இறந்தால் மந்த்ரமில்லாமல் ஸபிண்டீகரணம் முதலியவை செய்ய வேண்டும்.)

23. மாஸத்திற்கு ஒருமுறை செய்யும் ஸோதகும்பம் நின்று போனால் அதற்கு வேறுகாலமில்லை. விட்டது விட்டதுதான்.

24. ஊனமாஸிகங்கள் அந்தஅந்தக்காலத்தில் செய்ய முடியாமல் நின்றுபோனால்மீண்டும் செய்ய முடியாது. 27 – ஆவது நாள் ஊனத்தை 27 முதல் 30 நாளுக்குள்ளும் 45 – ஆவதுநாள் ஊனத்தை 40க்கு மேல் 41,43,45 முதலிய ஒரு நாளிலும், ஆறாம் மாத ஊனத்தை 170 நாள்களுக்குமேல் 180 நாள்களுக்குள்ளும், ஆப்திக ஊனத்தை 340 க்குமேல் 355 நாள்களுக்குள்ளும் செய்ய வேண்டியது.

த்ரைபக்ஷிகம் என்பது 45_ஆவது நாள் ஊனம். ஏகாதசி, வ்ரததினங்கள், வெள்ளிக்கிழமையில் செய்யக் கூடாது. மற்ற ஊனங்களையும் வெள்ளிக்கிழமை நந்தை (பிரதமை), ஷஷ்டி, ஏகாதசி, சதுர்த்தசி, ஸிநீவாலீ (சதுர்தசியோடு கூடிய அமாவாஸ்யை), கிருத்திகை, ஆயில்யம், பூரம், கேட்டை, மூலம், பூராடம், பூரட்டாதியிலும், ஏகாதசி முதலிய விரத தினங்களிலும் செய்யக்கூடாது. த்விபுஷ்கரம், த்ரீபுஷ்கரம் கூடாது.

த்விதியை, ஸப்தமி, த்வாதசி ஆகிய திதிகள், ஞாயிறு, செவ்வாய், சனி ஆகிய வாரங்கள், கிருத்திகா, புனர்வசு உத்தரம், விசாகம், உத்தராடம், பூரட்டாதி, ஆகிய நக்ஷத்ரங்கள் இவற்றில் இரண்டு சேர்ந்தால் த்விபுஷ்கரம்; மூன்று சேர்ந்தால் த்ரிபுஷ்கரம்.

தோஷமற்ற காலம் கிடைக்காவிட்டால் விதிக்கப்பட்ட காலத்தின் கடைசிதினத்தில் செய்ய வேண்டியது. ஊனமாஸிகங்களை மாஸிகத்திற்கு முன் அல்லது பின்னாகச் செய்யலாம்.

25. ஒரு மாதத்தில் இரண்டு திதிகள் வந்தால் பின் திதியில் சிராத்தம். பின் திதியில் ஸங்கிரமண தோஷம் வருமாயின் முன் திதியிலேயே சிராத்தம் பண்ணவேண்டும். இரண்டு திதியிலும் தோஷமிருந்தால் இரண்டாவது திதியில் செய்யவேண்டும்.

26. ஒருவரது சிராத்தத்தில் அவரது ஜ்ஞாதிகள் நிமிந்த்ரணம் இருக்கக் கூடாது. அதே கோத்ரத்தைச் சேர்ந்தவர்களும் கூடாது.

27. பிதா, புத்ரன், ஒரே வயிற்றில் பிறந்த ப்ராதாக்கள் ஒரே நாளில் நிமிந்த்ரணம் இருக்கக் கூடாது. பத்னி பஹிஷ்டையானால் பர்த்தா நிமிந்த்ரணம் இருக்கக்கூடாது.

28. ஹோமத்துடன் செய்யும் சிராத்தங்களுக்கு தர்ப்பணம் உண்டு. (தகப்பனார் ஜீவித்திருக்கும் ஒருவன் செய்யும் சிராத்தத்தில் தர்ப்பணம் இல்லை.) இந்த தர்ப்பணம்

ஒரு வர்கத்துக்குமட்டில். மாதா பிதா சிராத்தங்களில் தர்ப்பணத்தை மறுநாள் செய்யவேண்டும். இது பரேஹனி தர்ப்பணம் எனப்படும். (இப்பொழுது அன்றே செய்வதும் வழக்கத்தில் உள்ளது). மாதா பிதாக்களுக்கு அன்றே செய்வது சரி இல்லை. அது பரேஹனி தர்ப்பணமாகாது. அங்கதர்பணம் தான். மாதா பிதாக்கள் தவிர பிதாமஹன் முதலியவர்களுக்கு ச்ராத்த தினத்தன்றே தர்ப்பணத்தைச்செய்ய வேண்டும்.

29. அமாவாஸ்யையும் மாஸப்பிறப்பும் ஒன்று சேர்ந்தால் மாஸப்பிறப்புத் தர்ப்பணம் செய்ய வேண்டியது. அமாவாஸ்யை தர்ப்பணம் கிடையாது.

30. அமாவாஸ்யை, ப்ரத்யாப்திகம் ஒன்று சேர்ந்தால் ப்ரத்யாப்திகத்துக்குப் பிறகு அமாவாஸ்யை தர்ப்பணம். மாதப்பிறப்பு, ப்ரத்யாப்திகம் ஒன்று சேர்ந்தால் ஸங்க்ரமண தர்ப்பணத்தை முதலில் செய்துவிட்டு பிறகு ப்ரத்யாப்திக ச்ராத்தத்தைப் பண்ணவேண்டும்.

31. பிதாவின் ஸபிண்டீகரணத்திற்குப் பின் அமாவாஸ்யை முதலான தர்ப்பணங்கள் செய்யவேண்டியது.

32. கிரஹண தர்ப்பணம் மிக விசேஷமானது. இதை விடக்கூடாது. சூரிய கிரஹணத்தில் முன் பாதியிலும் (பிடித்த உடனேயும்) சந்திர கிரஹணத்தில் பின் பாதியிலும்(விட ஆரம்பித்த பிறகும்) தர்ப்பணம் செய்ய வேண்டும்.

33. கன்யகையின் ஜனனமரணத்தில் மூன்று தலைமுறை வரை ஆசௌசம். புருஷப்ரஜை விஷயத்தில் ஏழு தலைமுறை. சிசு மரணத்தில் புதைத்தது முதல் தீட்டு கணக்கிட வேண்டும்.

34. ஒருநாள் என்பது 60 நாழிகை (பகல் 30, இரவு 30). பகல், இரவு காலங்களின் அளவுகள் கோடை, குளிர் காலங்களைப்பொறுத்தது. 30 நாழிகைக்கு அதிகமாகவோ (அ) குறைவாகவோ இருக்கும்.

35. சூரிய உதயத்தில் வாரம் (கிழமை) பிறக்கிறது.

36. ஒரு நாழிகை என்பது 24 நிமிஷம். ஒரு மணி என்பது 2 ½ நாழிகை. ஒரு முகூர்த்தம் என்பது 3 ¾ நாழிகை(அதாவது1 ½ மணி காலம்). ஒரு ஜாமம் என்பது 3 மணி காலம் அதாவது 7 ½ நாழிகை. (சில நூல்களில் சில இடங்களில் முகூர்த்தம் என்பது 2 நாழிகை என்றும் உள்ளது).

37. தீட்டு உள்ளவர் மற்றவர்களை ஸேவிப்பது கூடாது. தீட்டு உள்ளவர்களையும் மற்றவர் ஸேவிப்பது கூடாது.

38. தீட்டுக்காரர் வீட்டில் சாப்பிட்டாலும், வசித்தாலும் 10 நாட்களுக்கு தீட்டு உண்டு.

39. சிராத்த தினத்தில் துக்கம் கேட்கக்கூடாது.

40. தீட்டுத் தர்ப்பணத்தை வீட்டில் செய்யக்கூடாது. ஜலக்கரையில் செய்ய வேண்டும்.

41. ப்ரஹ்மசாரிகள் க்ருத்யம் செய்தால் மட்டும் உதகதானம், இல்லாவிடில் இல்லை.

42. பங்காளிகள் விஷயத்தில் தலைமுறைக் கணக்கு :

தான் (1), தன் பிதா (2), தன் பிதாமஹன்(3), தன் ப்ரபிதாமஹன்(4), ப்ரபிதாமஹனின் பிதா(5), ப்ரபிதாமஹனின் பிதா மகன்(6), ப்ரபிதாமஹனின் ப்ரபிதாமஹன்(7) ஆக ஏழு தலை முறை. தன் வம்ச வழியில் மேற்குறிப்பிட்ட இந்த ஏழாவ்து நபர் **கூடஸ்தர்(அ) மூலபுருஷர்** எனப்படுவர். கூடஸ்தரின் ஆண் ஸந்ததிகள், அவர்களுக்கு பிறந்த ஆண் ஸந்ததிகள், தன்வரை உள்ள ஏழு தலை முறை ஆண்களும் (அவர்

மனைவியரும்) பத்து நாள் பங்காளிகள் (ஸாபிண்ட்யர்), (தன் மகனுக்கு மேற்படி மூலபுருஷன் (1)ஐ விட்டு, மேற்குறிப்பிட்ட நபர் (2)ஐ கூடஸ்தராக கொள்ள வேண்டும்) பத்து நாள் பங்காளிகளில் பரஸ்பரம் பத்துநாள் தீட்டுண்டு. தனக்குக் கீழ் ஸந்ததி (ஏழு தலைமுறை வரை) ஸமானோதர் எனப்படுவர். இவர்கள் மூன்று நாள் தீட்டுக்காரர்கள். இதே வம்ச பரம்பரையில் உள்ள மற்றவர்கள் கோத்ர தாயாதர்கள் என்பதால் தீட்டுக்காப்பவர் அல்லர். (பெண்களுக்குத் தகப்பனார், அவர் தந்தை, தகப்பனின் பாட்டன் ஆகியவர் ஸபிண்டர்கள் எனப்படுவர்)

ஒவ்வொரு நபரும் தன் வம்ச வழியில் மேல் கீழ் தலைமுறையில் உள்ள (அ) இருந்த நபர்களை (அவர் மனைவி, ஆண் ஸந்ததி உட்பட) அறிவது அவசியம். அப்பொழுதுதான் பங்காளிகளால் ஏற்படும் தீட்டை நிர்ணயிக்க முடியும். தலைமுறை கூடஸ்தனிலிருந்து எண்ணப்பட வேண்டும்.

43. ப்ரஹ்மசாரி தன் தாய் தகப்பன் தவிர மற்றவர் சவங்களைச் [illegible]க்கக் கூடாது.

44. அதிக்ராந்த ஆசௌசத்தில் வாஸோதகம் இல்லை.

45. ஜனன, மரணத்தீட்டிலும் ஏகாதசி, த்வாதசி விரதங்களை விடக்கூடாது.

46. கர்த்தா, ஸபிண்டீகரணத்துக்கு முன் சுபகார்யம் செய்யக்கூடாது.

47. தீட்டினால் நின்றுபோன மாஸிகத்தை தீட்டுப்போகும் தினத்தில் நடத்த வேண்டும்.

48. ஸ்த்ரீகள் செய்யும் சிராத்தங்கள் எதற்கும் ஹோமம் கிடையாது என்பர் சிலர். மாமனார், மாமியார், பர்த்தா, தாய், தகப்பன் இவர்களுடைய சிராத்தத்தை ஸ்த்ரீகள் செய்யும்படி நேர்ந்தால் அந்த ச்ராத்தங்கள் த்ரிபுருஷோத்தேச்யகமாக, பார்வணமாக செய்ய வேண்டும் என்று மட்டும் ஸ்ம்ருதிகளில் கூறப்பட்டுள்ளது. ஹோமத்தைப் பற்றி கூறவில்லை. இதை நோக்கின் ஹோமம் வேண்டாம் என்று தோன்றுகிறது. ஆனால் சிஷ்டாசாரத்தில் பல பெரியோர்கள் மேற்படியோர் ச்ராத்தத்தில் ஹோமம் செய்தே வருகின்றனர். (இவை பஹிஷ்டையினால் நின்றுபோனால் ஐந்தாவது தினம் செய்ய வேண்டும்).

49. சிராத்தம் தீட்டினால் நின்றுபோனால் தீட்டுப்போகும் தினத்தில் செய்ய வேண்டும். வேறு காரணத்தினால் (அ) மறதியினால் விட்டுப்போனால் க்ருஷ்ணபக்ஷ ஏகாதசியிலாவது அமாவாஸ்யையிலாவது செய்ய வேண்டும்.

50. மஹாளய தர்ப்பணத்தை மஹாளய பக்ஷத்தில் பஞ்சமி முதல் அடுத்த பஞ்சமிக்குள் தகப்பனார் இறந்த திதியிலோ, வ்யதீபாதத்திலோ, கஜச்சாயையிலோ மஹாபரணியிலோ, மத்யாஷ்டமியிலோ, த்வாதசியிலோ செய்யவும். வேறு தினங்களானால் வெள்ளிக்கிழமை கூடாது. தன்னுடைய, தன் பத்நீயுடைய, ஜ்யேஷ்ட புத்ரனுடைய ஜந்ம நக்ஷத்ரங்களிலும் செய்யக் கூடாது. முடியாவிடில், கன்யா(புரட்டாசி) மாதத்திற்குள் செய்யவேண்டும். முடியாவிட்டால் துலா(ஐப்பசி) மாத முடிவுக்குள் செய்ய வேண்டும்.

ஸன்யாசிகளின் மஹாளயத்தை த்வாதசியிலேயே பண்ண வேண்டும்.

ஆயுதம் முதலியவற்றால் அடிபட்டு இறந்தவர், துர்மரணம் அடைந்தவர், இவர்களுக்கு மட்டும் சதுர்தசியில் பண்ண வேண்டும். சதுர்தசியில் மற்றவர்களுக்குப் பண்ணக்கூடாது.

தாயார், தகப்பனார் சிராத்தம் வரும் மாதத்தில் சிராத்தத்திற்கு முன் மஹாளய தர்ப்பணம் செய்யக்கூடாது. பிறகுதான் செய்ய வேண்டும்.

## சில சொற்களின் பொருள்

| | |
|---|---|
| அத்தான் | : அத்தையின் பிள்ளை |
| அத்தங்கார் | : அத்தையின் பெண் |
| அதிக்ராந்த ஆசௌசம் | : காலங்கடந்து கேட்டதீட்டு |
| அநுபநீதன் | : உபநயனம் ஆகாதவன் |
| அமந்த்ரகம் | : மந்த்ரமில்லாமல் |
| அம்மங்கார் | : மாமாவின் பெண் |
| அம்மான்சேய் | : மாமாவின் பிள்ளை |
| அனுகமனம் | : கூடப்போவது |
| அஸ்தி | : எலும்பு |
| ஆசௌசம் | : தீட்டு |
| ஆஹிதாக்னி | : யாகம் செய்தவர் |
| ஆசௌசி | : தீட்டுடைய நபர் |
| உபநீதன் | : உபநயனம் ஆனவன் |
| உதகதானம் | : தர்ப்பணம் |
| கர்த்தா | : கர்மாவைச் செய்ய அதிகாரம் உள்ளவன் |
| கர்ப்பஸ்ராவம் | : கருச்சிதைவு |
| கனனம் | : புதைத்தல் |
| கனிஷ்டன் | : இளையவன் |
| கன்யா, கன்யகை | : விவாஹமாகாத பெண் |
| கூடஸ்தன் | : வம்சவழியில் முதல் நபர் |
| க்ருஹம் | : வீடு |
| ச்ரோத்ரியன் | : ஒரு சாகையைப்பூர்ணமாக அத்யயனம் செய்தவன், வேதாந்தகாலக்ஷேபம் செய்தவன் |
| ச்வசுரன் | : மாமனார் |
| ச்வச்ரூ | : மாமியார் |
| ஜனனம் | : பிறப்பு |
| ஜனகபிதா | : தன்னைப்பெற்ற பிதா |
| ஜனகமாதா | : தன்னைப்பெற்ற மாதா |
| ஜாதாசௌசம் | : பிறப்புத் தீட்டு |
| ஜாமம் | : 7½ நாழிகை(அ) மூன்று மணி காலம்: |
| ஜாமாதா | : மாப்பிள்ளை |
| ஜீவபித்ருகன் | : தகப்பன் உயிரோடு இருக்கும் நபர் |

ஜ்யேஷ்டன் : மூத்தவன்

ஜ்யேஷ்டப்ராதா : அண்ணன், தமையன்

ஜ்யேஷ்டப்ராத்ரு பத்னி : மதனி

ஜ்ஞாதி : பங்காளி

தர்ப்பணம் : எள்நீர் கடன்

தர்பணம் (darpanam ) : கண்ணாடி

தர்சம் : அமாவாஸ்யை

தனஹாரி : சொத்தை அடைந்தவன்

தஹனம் : எரித்தல்

திலம் : எள்

துஹிதா : பெண்

தௌஹித்ரன் : பெண் வயிற்றுப் பேரன்

தௌஹித்ரி : பெண்வயிற்றுப் பேத்தி

த்ரிராத்ரம் : மூன்று இரவு;(மூன்று நாள்)

நிமிந்த்ரணம் : சிராத்தத்தில் ஸ்வாமியாக அன்வயிப்பது

பத்னி : மனைவி

பஹிஷ்டை : மாதவிடாய்

பர்த்தா : கணவன்

பாகிநேயன் : மருமான்

பார்வணம் : மூன்று பேர்களை உத்தேசித்த சிராத்தம

பித்ருவ்யன் : பெரியப்பா, சிற்றப்பா(தகப்பன்வழி)

பிதாமஹன் : தகப்பனின் தகப்பன்; பாட்டன்.

பிதாமஹி : தகப்பனின் தாய்;பாட்டி.

பிந்நோதரப்ராத்ா : தனது தகப்பனாருக்கு மற்றொரு மனைவியிடம் பிறந்த ஸஹோதரன் அதாவது மாற்றாந்தாய் பிள்ளைகள்(தகப்பன் ஒருவர் தாய் வெவ்வேறு).

பித்ருவ்யபத்னி . பெரியப்பா, சிற்றப்பா மனைவி (தகப்பன் வழி)

பௌத்ரன் : பேரன்

பௌத்ரி : பிள்ளையின் பெண்

ப்ரபௌத்ரன் : கொள்பேரன்

ப்ரஜை : குழந்தை

ப்ராத்ரு புத்ரன் : ஸஹோதரன் பிள்ளை

ப்ராத்ரு புத்ரி : ஸஹோதரன் பெண்

ப்ரதமாப்தீகம் : (முதல் வருஷ) ஆப்தீகம்

ப்ரத்யாப்தீகம் : வருஷந்தோறும் அநுஷ்டிக்கும் சிராத்தம்

ப்ரபிதாமஹன் : கொள்ளுப் பாட்டன்;
தந்தை வழிப்பாட்டனின் தகப்பன்

ப்ரபிதாமஹி : கொள்ளுப்பாட்டி தந்தை;
வழிப்பாட்டனின்தாய்

மாதாமஹன் : தாய்வழிப்பாட்டன்; தாயின் தந்தை

மாதாமஹி : தாயின்தாய்

மாதுலானி : மாமி, அம்மான் மனைவி

மாத்ருபகினீ : தாயின் ஸஹோதரி

மாத்ருஷ்வஸா : தாயின் ஸஹோதரி

ரஜஸ்வலை : பஹிஷ்டையான பெண்

வபனம் : க்ஷௌரம்

விச்சித்தி : கருச்சிதைவு(abortion)

விதுரன் : மனைவி இறந்த கணவன்

வஹனம் : சுமத்தல்

ஸஹோதரன் : உடன்பிறந்தவன்

ஸங்க்ரமணம் : மாதப்பிறப்பு

ஸத்ய: சௌசம் : ஸ்நானம் மட்டில்

ஸபத்னி மாதா : மாற்றாந்தாய்

ஸம்பர்க்கம் : சேர்க்கை

ஸம்வத்ஸரம் : வருஷம்

ஸமானோதகர் : மூன்று நாள் பங்காளிகள்
(த்ரிராத்ர ஞாதிகள்)

ஸன்னி பாதம் : சேர்க்கை

ஸாபிண்ட்யர் : பத்து நாள் பங்காளிகள்
(தசராத்ர ஞாதிகள்)

ஸினிவாலி : சதுர்தசியோடு கூடிய அமாவாஸ்யை

ஸ்நுஷா : நாட்டுப்பெண்

ஸ்யாலன் : மைத்துனன்

ஸ்வல்பம் : குறைவு

ஸ்வீகாரபிதா : ஸ்வீகாரம் எடுத்துக்கொண்ட தகப்பன்

ஸ்வீகாரமாதா : ஸ்வீகாரம் எடுத்துக்கொண்ட மாதா

ஸ்வீகாரம் : "தத்து கொடுத்தல்"

ஸசேல ஸ்நானம் : உடுத்த துணியோடு ஸ்நானம்

மோக்ஷம் அடைய, கீழ்க்காணும் இரு பாசுரங்களையும் ஸதா அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கவும்.

நின்னருளாங் கதியின்றி மற்றொன் றில்லேன்
நெடுங்காலம் பிழைசெய்தேன் நிலை கழிந்தேன்
உன்னருளுக் கினிதான நிலை உகந்தேன்
உன்சரணே சரணென்னும் துணிவு பூண்டேன்
மன்னிருளாய் நின்றநிலை எனக்குத் தீர்த்து
வானவர்தம் வாழ்ச்சிதர வரித்தேன் உன்னை
இன்னருளால் இனியெனக்கோர் பரமேற்றாமல்
என்திருமால் அடைக்கலங்கொள் என்னை நீயே.
(ஸ்ரீ தேசிகப்ரபந்தம் — அமிருதாசுவாதினி–31 )

என்னுயிர்தந் தளித்தவரைச் சரணம் புக்கி
யானடைவே யவர்குருக்கள்நிரை வணங்கிப்
பின்னருளாற் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால் நம்பி
நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக் கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனை நாதன்
இன்னமுதத் திருமகளென் றிவரை முன்னிட்(டு)
எம்பெருமான் திருவடிகள் அடைகின் றேனே.
(ஸ்ரீ தேசிகப்ரபந்தம் _ அதிகாரசங்கிரகம் _3 )